பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் -கிளை நூலகம்

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5·00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 | திருவள்ளுவர் ஆண்டு 2025 | ஆடி 14 | 30-07-94 | சனிக்கிழமை ஓசை 162

## வளர்முக நாடுகளில் பெண்களுக்கு பிரசவகால பாதுகாப்பு போதாது

வளர்முக நாடுகளில் பெண்களுக்குப் பிரசவகாலப் பாதுகாப்பு போதியளவு இல்லாமையால் இலட்சக்கணக்கான பெண்கள் பாதிக்கப்படுகின்றனர் என உலக சுகாதார ஸ்தாபனம் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. இந்நாடுகளில் உள்ள பெண்களில் பூரணமான பிரசவகால வசதிகள் கிடைக்கும் பெண்கள் அறுபது சதவீதத்திற்கும் குறைவானவர்களாகும். இவ்வசதிக்குறைவு காரணமாக ஒவ்வொரு வருடமும் ஐந்து இலட்சத்துக்கும் மேற்பட்ட பெண்கள் உயிரிழக்கின்றனர். ஒவ்வொரு வருடத்திலும், ஒரு கோடி 26 இலட்சம் குழந்தைகள் தமது ஐந்தாவது வயதை அடையுமுன்னர் உயிரிழக்கின்றனர்.

# அரச சார்பற்ற நிறுவன தொண்டர் 10,000 பேர் தேர்தல் கண்காணிப்பில்!

### தனியார் செயற்கை உறுப்பு நிறுவனம்

செயற்கை உறுப்புக்களை அமைக்கும் தனியார் நிறுவனமொன்று தற்போது கொழும்பில் அமைக்கப்பட்டுள்ளது.

முல்லேரிய அங்கொடையில் அமைக்கப்பட்ட மேற்படி செயற்கை உறுப்புகள் தயாரிக்கும் தனியார் நிறுவனம் நவீன தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்தி மேற்படி உறுப்புகளை அமைத்து வருவதாக தெரிய வருகின்றது.

## 'சுதந்திர தேர்தல் அமைப்பு' ஏற்பாடு

(கொழும்பு)

**அடுத்தமாதம் 16ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தல்; வன்முறைகள் அற்ற சுமுகமான சூழலில் நடத்துவதற்கு உதவும் பொருட்டும், அதனை மேற்பார்வை செய்வதற்கெனவும், இருபத்தி இரண்டு அரச சார்பற்ற நிறுவனங்களைச் சேர்ந்த 10,000 தொண்டர்கள் பயன்படுத்தப்படவுள்ளதாக சுதந்திர தேர்தல் அமைப்பின் தலைவர் சாள்ஸ் அபேசேகரா தெரிவித்துள்ளார்.**

ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திற்கு சுதந்திர தேர்தல் அமைப்பு மேற்கொள்ள இருக்கும் செயற்திட்டம் தொடர்பாக தமது கொள்கைகளை விளக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நியமனப் பத்திரங்கள் தாக்கல் செய்த தினத்தில் இருந்து இன்று வரை கொலை, மற்றும் வன்முறைச் சம்பவங்கள் தொடர்ந்து அதிகரித்து வருவதாகவும் எனவே தேர்தல் தினத்தில் பல வன்முறைச் சம்பவங்களும், கொலைகளும் நடைபெறலாம் என தாம் எதிர்பார்ப்பதாகவும், எனவே இதற்கு முன்கூட்டியே நடவடிக்கை எடுக்க தமது அமைப்பு முன்வந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாட்டு பிரதிநிதிகள் இருந்தாலே தேர்தலை கண்காணிக்க அனுமதி

-சந்திரானந்த டீ சில்வா

(கொழும்பு)

வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டால் மட்டுமே அரச சார்பற்ற பிரதிநிதிகள் ... கிழக்கு மாகாணத்திற்கு ... தெரிவித்துள்ளது-

### வீரச்சாவு



கப்டன் சிந்து

அராலித்துறைப் பகுதியில் கடந்த 27-ம் திகதி சிறிலங்கா இராணுவத்தினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் ...

## யாழ். கப்பல் சேவைகள் தாமதம் உணவுப்பொருள் வருவதில் தடங்கல்

(கொழும்பு)

தென்பகுதியில நடைபெறும் அரசியல் கொந்தளிப்பாலும் சிறிலங்கா கடற்படையினர் மேற்கொண்டு வரும் கெடுபிடி நடவடிக்கைகளாலும் வடபகுதிக்கான கப்பல் சேவைகள் தாமதமடைந்துள்ளதாகவும் இதனால் உணவுப் பொருட்களை எடுத்து வருவதில் தடங்கல்கள் ஏற்படுவதாகவும் தெரியவந்துள்ளது.

தற்போது கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும் றுகுணு கப்பலில் பொருட்களை ஏற்றுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் இன்று புறப்பட வேண்டிய இக்கப்பல் இன்னும் பத்து நாட்களின் பின்பே துறைமுகத்தை விட்டு பருத்தித்துறை நோக்கிப் புறப்படும் எனவும் அறியவந்துள்ளது.

இதேவேளை இக்கப்பல் துறைமுகத்தைவிட்டு வெளியேறும்வரை மாகோ, ஜோமாரி கப்பல்கள் துறைமுகத்திற்குள் செல்வதற்கு கடற்படையினர் தடைவிதித்திருப்பதாக தெரியவருகிறது. இதனால் றுகுணு வெளியேறும்வரை இவ்விரு கப்பல்களும் துறைமுகத்திற்கு வெளி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலைக்கழக பொருட்கள் கொழும்பில் தேக்கம்

### கப்பல் வசதி இன்மை காரணம்

(யாழ்ப்பாணம்)

கப்பல் வசதியின்மையினால் யாழ். பல்கலைக்கழகத்திற்கான பொருட்கள் யாழ்ப்பாணம் எடுத்து வரப்பட முடியாமல் தேங்கிக் கிடக்கின்றன என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

இப் பொருட்களுக்கான அனுமதிகள் ...

அத்துடன் யாழ். பல்கலைக்கழகத்திற்கென கொழும்பில் வைக்கப்பட்டிருக்கும் பொருட்கள் அனைத்தும்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

### தனியார் மருத்துவகல்லூரி மாணவர்விவகாரம்

## மூதவையும்பேரவையுமே

(கொழும்பு)

வெளிநாட்டு பிரதிநிதிகள் கலந்து கொண்டால் மட்டுமே அரச சார்பற்ற பிரதிநிதிகள் தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடுவதற்கு அனுமதியளிக்கப் போவதாக தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா தெரிவித்துள்ளார்-

இதனைத் தொடர்ந்து சுமார் இருபது வெளிநாட்டு பிரஜைகளைப் பயன் படுத்தப் போவதாக அரச சார்பற்ற தேர்தல் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது-

தமது குழு பதினேழு மாவட்டங்களில் மட்டுமே தேர்தல் கண்காணிப்பில் ஈடுபடும் என்றும் தற்போது பத்து மாவட்டங்களுக்கு இதுவரையில் கண்காணிப்பாளர் அனுப்பப்பட்டு விட்ட தாகவும்

-சந்திரானந்த டீ சில்வா

கிழக்கு மாகாணத்திற்கு ஒரு பிரிவினரை அனுப்புவது தொடர்பாக தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் அக் குழு தெரிவித்துள்ளது-

இதேவேளை சர்வோதய அமைப்பும் அதன் தொண்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# தேர்தல் தினம் நெருங்க வன்முறைகள் அதிகரிப்பு

## சு. க. பொதுச் செயலாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் தினம் நெருங்க நெருங்க வன்முறைச்சம்பவங்கள் அதிகரித்து வருவதாகவும் கொலை மிரட்டல்கள் தொடர்வதாகவும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார்.

தேர்தல் நியமனப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டதினத்தன்று அனுராதபுரத்தில் நடைபெற்ற கொலைச்சம்பவத்திற்கும் ஐ-தே- கவிற்கும் உள்ள தொடர்பை ஐக்கிய தேசியக் கட்சியினர் ஒப்புக் கொண்டுள்ளனர் என மேலும் அவர் தெரிவித்தார்.

இடையில் ஏற்பட்ட திடீர் மோதலின்போது விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# புலமைப் பரிசில் அனுமதி அட்டை

(யாழ்ப்பாணம்)

ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் யாழ். கல்வித் திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

இவை நேற்று அந்தந்தப் பகுதி கோட்டக் கல்வி அலுவலகங்களிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளன

எனவே யாழ். வலயம் - 1 இற்குட்பட்ட பாடசாலை அதிபர்கள் தங்களது கோட்ட அலுவலகத்தில் அனுமதி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளும்படி அதன் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொண்டுள்ளார். (பா)

லைக்கழக துணைவேந்தர் தெரிவித்துள்ளார்.

இப் பொருட்களுக்கான அனுமதிகள் பெறப்பட்டு இருந்த போதும் கப்பல் வசதியின்மையால் அவை தேங்கிக் கிடக்கின்றன. எனவே யாழ். அரச அதிபரிடம் தாம் தொடர்பு கொண்டு ஒரு தொகுதி பொருட்களை எடுத்து வருவதற்கு முயற்சி மேற்கொண்ட வேளை அதற்கும் சிறிது இடையூறுகள் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

# மூதவையும் பேரவையுமே முடிவு எடுக்கமுடியும்

யாழ். பல்கலைக் கழக மூதவையினாலும், பேரவையினாலும், தனியார் மருத்துவக் கல்லூரி மாணவர்களை யாழ். பல்கலைக் கழக மருத்துவபீடத்துடன் இணைப்பது தொடர்பாக எடுக்கப்பட்ட முடிவை என்னால் மாற்ற முடியாது. அடுத்த முறை பேரவையும், மூதவையும் கூடியே இதை தீர்மானிக்கலாம் என யாழ். பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தெரிவித்துள்ளார்.

தனியார் மருத்துவ கல்லூரியின் 43 மாணவர்களை யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் அனுமதிப்பதென பல்கலைக் கழக மூதவையும் பேரவையும் எடுத்த முடிவைக் கண்டித்து யாழ். பல்கலைக் கழக மருத்துவ பீட மாணவர்கள் நேற்று முன்தினம் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர்

மூதவையினதும் பேரவையினதும் முடிவைக் கண்டிக்

(6 ஆம் பக்கம் பார்க்க

## யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு

# கொழும்பில் தேங்கியுள்ள பொருள்களால் சங்கடம்

(யாழ்ப்பாணம்)

ஜெய்ப்பூர்செயற்கைக் கால் தயாரிப்பு நிறுவனத்தின் யாழ். கிளைக்கு வந்த பொருட்கள் போக்குவரத்துச் சீரின்மையால் வருடக் கணக்கில் கொழும்புத் துறைமுகத் தில் தேங்கிக் கிடக்கின்றன.

இப் பொருட்களுக்கான களஞ்சிய வாடகையாக 75,000ரூபாவை உடனடியாக அனுப்பி வைக்குமாறு, யாழ். ஜெய்ப்பூர் நிறுவனத்திற்கு துறைமுக அதிகார சபை கடிதமொன்றை அனுப்பி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐக்கிய தேசியக் கட்சி குண்டர்களால் போலிசாருக்கும் கொலை மிரட்டல்

(கொழும்பு)

சிறிலங்கா பொலிசாருக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த குண்டர்களால் கொலை மிரட்டல் விடுக்கப் பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையலுவலக அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

தேர்தல் விதிகளை மீறி ஒட்டப்பட்டிருந்த சுவரொட்டிகள் மற்றும் பதாகைகளை அப்புறப்படுத்திய களுத்துறைப் பொலிஸ் பிரிவைச் சேர்ந்த பொலிசாருக்கு இம் மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளதாக அவ் அதிகாரி தெரிவித்தார். இதனால் தேர்தல் கடமைகளை ஒழுங்காகச் செய்யமுடியாத நிலைமை தமக்கு ஏற்பட்டுள்ளதாகவும் தேர்தல் சட்ட விதிகள் மீறப்படுவது தொடர்பாக தமக்கு பலமுறைப்பாடுகள் கிடைத்து வருகின்றபோதும் அமைச்சர்களின் அழுத்தத்தினால் இவற்றின்மீது நடவடிக்கை எடுக்க முடியாதுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்

# எதிரணியினர் வீடுகளை அடித்து நொருக்க உத்தரவு

(கொழும்பு)

அப்புத்தளை தேர்தல் தொகுதியில், பொதுஜன ஐக்கிய முன்னணியின் ஆதரவாளர்களின் வீடுகள் பல நேற்று நண்பகல் அளவில் தாக்கப்பட்டன.

ஐக்கிய தேசியக் கட்சியினதும், அதன் தோழமைக் கட்சிகளினதும் சிரேஷ்ட தலைவர்களின் தூண்டுத

( 6 ஆம் பக்கம் பார்க்க )

# இன்று படகுச் சேவை

கிளாலி - பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மாணவர் அரங்கு

க. பொ. த. உயர்தரப் பரீட்சையை முன்னிட்டு விசேட மாணவர் அரங்கு நாளை வெளிவருகிறது. இதில் இரசாயனவியல், விலங்கியல் பாடங்களுக்கான "பரீட்சை வழிகாட்டி" வெளிவருகின்றது.

## இருவருட ஒப்பந்த அடிப்படையில்

# வடக்கு-கிழக்கில் சேவையாற்ற ஏழு ஐரோப்பிய வைத்தியர்கள்

வடக்கு-கிழக்குப் பகுதிகளில், ஐக்கிய நாடுகள் அபிவிருத்திதிட்டப் பிரிவினரால் வைத்திய நிபுணர்கள் பற்றாக்குறையை நீக்குவதற்காக, வெளிநாட்டு வைத்திய நிபுணர்கள் இவ்வருட இறுதியளவில் சேவையாற்ற வரவழைக்கப்படவுள்ளார்கள்.

வடக்கில் நிலைமைகளை நேரில் அவதானிக்குமுகமாக ஐ நா. நிகழ்ச்சித்திட்ட மனிதாபிமான செயற்திட்டங்களுக்கான ஆலோசகர் மல்கம் ரீடவுட்டும், ஐ.நா. தொண்டர்சேவை அதிகாரியான பங்களாதேசைச் சேர்ந்த ரப்பான் குமார் பர்மனும், யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள்.

நேற்று, பருத்தித்துறை வைத்தியசாலைக்கு விஜயம் செய்த இவர்கள். இன்று பளை, கோப்பாய் வைத்திய சாலைகளுக்கும் விஜயம் செய்யவுள்ளனர்.

மொத்தமாக ஏழு வைத்திய நிபுணர்கள் வடக்கு-கிழக்கில் சேவையாற்றவுள்ளதாகவும், வடக்கில், யாழ்ப்பா

( 6 ஆம் பக்கம் பார்க்க)

# ஐ.தே.க. ஆட்சியை விரட்ட பல்கலை.மாணவர்அமைப்பு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை விரட்டும் மாணவர் அமைப்பு என்ற பெயரில் மொறட்டுவ பல்கலைக் கழக மாணவர்கள் புதிய ஒரு அமைப்பை ஏற்படுத்தியுள்ளனர்.

தாம் எந்தக் கட்சியையும் சாராதவர்கள் எனவும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வருங்காலத் திட்டங்களை தாமே கையிலெடுத்துக் கொண்டு வெவ்வேறு முகங்களுடன் வரும் நபர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# எந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தாலும் தாக்கப்படலாமென தமிழர் அச்சம்

(கொழும்பு)

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தங்கியிருக்கும் தமிழர்கள் பெரும் பீதியுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தென்பகுதியில் தேர்தல் பிரசாரங்கள் சூடு பிடித்திருப்பதைத் தொடர்ந்து அங்கு இரவிரவாக ஒரே வெடிச்சத்தங்கள் கேட்பதாகவும் இடைக்கிடையே பீரங்கிச் சத்தங்கள்

( 6 ஆம் பக்கம் பார்க்க )

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

நேற்று முன் தினம் அதி காலை (28. 07. 94) கிளாலிக்கும் கல்வியங்காட்டிற்கும் இடையில் புத்தகங்கள், டயறி கொப்பிகள் மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய பை ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஈழநாதம் பணிமனையில் தயவுசெய்து ஒப்படைக்கவும். (8966)

## தேவை

G.C C வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண்பிள்ளைகள் தாதிமார், மருந்து கலவையாளர் தேவை: 31-07-94 பி.ப 2- மணிக்குநேர்முகமாக சான்றிதழ்களுடன் சந்திக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர். G.C.C வைத்திய நிபுணர் ஆலோசனை நிலையம், 514/14 ஆஸ்பத்திரி றோட், யாழ்ப்பாணம். (8972)

## விற்பனைக்கு

கொடிகாமம் புகையிரத நிலையத்திற்கு அருகாமையில் 6 பரப்புக்காணியும், 5 அறையும் வீடு சேர்ந்த கிணறு, பயன் தரும் மா, பலா, தென்னை, தேசி நிந்தமாக விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி சி. ஏகாம்பரநாதன் (கிளாக்சர்) மேல்மாடி சண்டி வீதி, கொடிகாமம். (சி-9967)

## மிருதங்கம்

மிருதங்க வகுப்புக்களும் நடைபெறுகின்றன. விரும்புவோர் தொடர்பு கொள்ளவும் கைவசம் புதிய மிருதங்கங்கள் குறைந்த விலையில் விற்பனைக்குண்டு. கோவிந்தபிள்ளை விஜயகுமார் 192/1 நாவலர் றோட்-பெருமாள் கோவிலடி, யாழ்ப்பாணம். (8937)

## விற்பனைக்குண்டு

கறுப்புப் பேட்டுக்குஞ்சுகள் பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. மல்லிகா பதி மானிப்பாய் (8963)

## கடவை ஊழியர் கொடுப்பனவு

[யாழ்ப்பாணம்]

புகையிரதக் கடவை ஊழியர்களின் வைகாசி மாதக் கொடுப்பனவு எதிர்வரும் முதலாம் திகதி யாழ் செயலகத்தில் வழங்கப்படும் எனத் தெரி

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை, இயற்கைவளங்கள், சக்தி, விஞ்ஞான அதிகார சபையின் ஆராய்ச்சி நன்கொடையொன்றின் கீழ் மனநோய் மருத்துவத் துறையில் தற்காலிகஆராய்ச்சி உதவியாளர் பதவிக்கு பொருத்தமானஅபேட்சகர்களிடமிருந்து 1994ஆகஸ்ட் 30-ம்தேதி வரை விண்ணப்பங்கள் என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

தேவைகள்

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முதலாம் வகுப்புப் பட்டம் மிகவும் விரும்பத்தக்கது. ஆராய்ச்சிப்பணியைச் செய்யவும் மக்களுக்கு உதவுவதற்கும் உயர்ந்த செயலூக்கம் உடையவராய் இருத்தல் வேண்டும். இரண்டு ஆண்டுகள் பணியாற்றுவதாக உறுதியளித்தல் வேண்டும்.

சம்பளம்

ஆராய்ச்சி உதவியாளர் - (முதலாம் அல்லது இரண்டாம்வகுப்புபட்டத்துடன்) 4500/- ரூபா மாதமொன்றுக்கு

ஆராய்ச்சி உதவியாளர் - (சாதாரண பட்டத்துடன்) 4300/- ரூபா மாதமொன்றுக்கு

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அமைந்துள்ள மக்கள் வங்கிக் கிளையில் அல்லது பல்கலைக்கழக நிதிக்கிளையில் ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூபா 20/- செலுத்திய பின்னர் இப் பல்கலைக்கழகத்தின் தாபனக்கிளைச் சிரேஷ்ட உதவிப்பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரம் விண்ணப்பங்கள் செய்யப்பட வேண்டும்.

தபால் மூலம் படிவங்களையும் விபரங்களையும் பெறவிரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர்/நிதியாளர் பெயரில் பெறப்பட்ட ரூபா 20/- பெறுமதியான காசுக்கட்டளை/தபாற் கட்டளையுடன் சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரையொட்டப்பட்ட 23X10 ச. மீ. அளவுடைய கடித உறையை அனுப்புதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகளின் விண்ணப்பதாரிகள் அந் நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் அனுப்புதல் வேண்டும்.

- பதிவாளர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி.
யாழ்ப்பாணம்.
1994-07-21

(சி-10002)

## கருத்தரங்கு

(குருநகர்)

சைவ சித்தாந்த ஆய்வு வட்டத்தின் 5ஆம் ஆண்டு நிறைவும்கருத்தரங்கும்இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்-பிரதான வீதி திருமறைக் கலாமன்றக் கேட்போர் கூடத்தில் ஆரம்பமாகும். (21)

## முதலாவது பிறந்த தின வாழ்த்து
## 30 - 07 - 1994



## செல்வன் செந்தூரன்

கொச்குவில் பிரம்படியைச் சேர்ந்த ஜெயக்குமார் விக்கினேஸ்வரி தம்பதிகளின் செல்வப் புதல்வன் செந்தூரன் தனது முதலாவது பிறந்த நாளை இன்று (30 - 07 - 94) தமது இல்லத்தில் வெகுவிமரிசையாக கொண்டாடுகிறார்செந்தூரனை அன்பு அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா, பெரியமாமி, கொழும்புச் சித்தப்பா, சின்னத்தை, உரும்பராய் மாமா, மாமி, சங்கர் மச்சான் மற்றும் உற்றார், உறவினர்கள், அனைவரும் பகவானின் அருள் பெற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

சி. கமலேஸ்வரி
(சின்ன அத்தை)

(8965)

## நினைவு கூருகின்றோம்...

## 30-07-1994...

1986-ம் ஆண்டு இதே தினத்தில் மன்னார் - காக்கையன்குளம் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் வீரச்சாவெய்திய,

**லெப். நிருபன்** (பொன்னுத்துரை கலாநிதி-வாரிக்குட்டியூர் - வவுனியா)

**முகிலன்** (குழந்தைவேல் கணேசலிங்கம் வாரிக்குட்டியூர் - வவுனியா)

1988-ம் ஆண்டு இந்தியப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலின் போது விழுப்புண்ணடைந்த நிலையில் சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய,

**கப்டன் மகேந்தி** (தம்பையா பாலகிருஷ்ணன் - தென்னமரவடி - திருமலை)

திருமலை - கன்னியா பகுதியில் இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**காந்தி** (கந்தையா பரமநாதன் - 6-ம் வட்டாரம், கும்புறுப்பிட்டி - திருமலை)

1989-ம் ஆண்டு மன்னார் - அடம்பன், நெடுங்கண்டல் பகுதியில் இந்தியப்படையினருடனான நேரடிச்சமரில் வீரச்சாவெய்திய,

**கப்டன் சுசிலன்** (சந்தியோகு நாகராசா மோகன் - தட்சணாமருதமடு - மன்னார்)

**லெப். நிசாம்** (அந்தோனி இதயராசா லம்பேட் - வங்காலை - மன்னார்)

மன்னார் - அடம்பன், தாமரைக்குளம் பகுதியில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட இளம் பெண் உட்பட 42 தமிழர்கள்.

புத்தூரில் இந்தியப்படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட வேம்பிராய் வாசிகளான 03 தமிழர்கள்.

1990-ம் ஆண்டு அம்பாறை - தங்கவேலாயுதபுரம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட பொறி வெடிவிபத்தில் எமைப் பிரிந்த,

**தினேஸ்** ( - - தம்பிலுவில் - அம்பாறை)

திருமலை - பன்குளம் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**நவா** (பா. மகேந்திரன் - அன்புவழிபுரம் - திருமலை)

ஆனையிறவு-குறிஞ்சாத்தீவுப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின் போது வீரச்சாவெய்திய,

**கானகன்** (கதிரைவேலு சதீஸ்குமார் - 174, நீவில் உருத்திரபுரம் - கிளிநொச்சி)

1991-ம் ஆண்டு ஆனையிறவில் மேற்கொள்ளப்பட்ட ஆ. க, வெ. நடவடிக்கையின்போது புல்லாவெளியிலிருந்து முன்னேறிய சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**செந்தூரன்** (கந்தையா நாகேந்திரன்-சென்றல்காம் - அம்பாறை)

**விநாயகன்** (சித்திரவேல் மோகன் - கோயில்போரதீவு - மட்டு)

**முரளி** (சின்னத்தம்பி மோகன்-பன்குடாவெளி-மட்டு)

**வசிதரன்** (குருகுலசிங்கம்சௌந்தரராஜன்-கொக்கட்டிச்சோலை - மட்டு)

**நிருபா** (சறோசினி சதாசிவம்-பெரியகல்லாறு-மட்டு)

**சோழன்** (மாணிக்கராசா சிறிசங்கர் - ஈச்சந்தீவு, ஆலங்கேணி - மட்டு)

**2-ம் லெப். காந்தரூபன்** (பிரான்சிஸ் நெல்சன் - 310, எம். சி. வீதி - திருமலை)

**சுலோஜன்** (சிற்சபை நிரஞ்சன்-நாயன்மார்த்திடல்,

நல்லூர்

கால்நடை வளர்ப்போரே, விவசாயிகளே,
கைத்தொழில் சிறு கைத்தொழில்
வல்லுனர்களே, விஞ்ஞான தொழில்
நுட்ப ஆர்வலர்களே!

உங்கள் திறமைகள்
உங்கள் கண்டுபிடிப்புக்கள்
உங்கள் ஆற்றல்கள்

உங்களது வீட்டில், உங்களது கிராமத்தில் தெரிந்தால் மாத்திரம் போதுமா?

தில் வழங்கப்படும் எனத் தெரி
விக்கப்பட்டது.


**POSTGRADUATE DIPLOMA IN PUBLIC ADMINISTRATION**

Applications are invited for the above course from graduates of a recognized University. Students awaiting results also can apply. The course is fee levying. Age preferably under 45.

Applicants should have adequate Proficiency in English to follow the course.

This is one year full-Time course. Candidates should sit an aptitude test / oral in English medium.

Prospectus & Application forms can be obtained from the Senior Assistant Registrar / Academic, University of Jaffna, on payment of Rs. 50/- at the Finance Branch.

Please forward the duly perfected application to the Senior Asst. Registrar / Academic, University of Jaffna on or before 1994-08-21.

- Registrar.

1994-07-28

(சி-9997)



**கண்காட்சி 1994**

உங்களது வீட்டில், உங்களது கிராமத்தில் தெரிந்தால் மாத்திரம்
போதுமா?

**அவற்றினை**
மாவட்ட மட்டத்திலும்
தமிழீழ அளவிலும் வெளிக்கொண்டுவர வேண்டாமா?

**12-08-1994 -ம் திகதி தொடக்கம் 10-09-1994-ம் திகதி வரை நல்லூரில் எம்மால் நடாத்தவுள்ள பொருண்மியக் கண்காட்சியில் கலந்துகொண்டு**

## உங்கள் பெருமையை

நாடளாவிய ரீதியில் வெளிப்படுத்துவதுடன் பெறுமதி மிக்க பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**விவசாயத்துறையில் நீங்கள் பயிரிட்ட பயிரின் மூலம்**

அதிக விளைச்சலைப் பெற்றிருக்கலாம். தரமான சுவையான விவசாய உற்பத்திகளாயிருக்கலாம்.

விலங்கு வேளாண்மைத்துறையில் உங்களிடம் உள்ள கால்நடைகள் ஏனையோரிடம் உள்ளதைவிட வித்தியாசமானதாக இருக்கலாம்.

புதிய தொழில் நுட்பத்தை நீங்கள் கண்டுபிடித்திருக்கலாம்.
புதிய இயந்திர சாதனங்களை நீங்கள் வடிவமைத்திருக்கலாம்.

எனவே
உங்கள் தனித்துவத்தை ஏன் நீங்கள்
வெளிக்கொண்டு வரக்கூடாது?

## மேலதிக விபரங்களை

உங்கள் பகுதி கிராமிய உற்பத்திக் குழுக்கள், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்ட, கோட்ட அலுவலகங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

(சி-10006)


310, எம். சி. வீதி - திருமலை)

**சுலோஜன்** (சிற்சபை நிரஞ்சன்-நாயன்மார்த்திடல், தம்பலகமம் - திருமலை)

**லெப். கர்ணன்** (தம்பிராசா புவனேஸ்வரன் - புளியம்பொக்கணை, பரந்தன் - கிளிநொச்சி)

**லெப். மயூரன்-அல்பிரட்** (சின்னத்துரை யோசப் கெனடி ஊர்காவற்துறை - யாழ்)

**லெப். தாஸ்** (தேவலிங்கம் அன்ரனிதாசன்-மயிலிட்டி - யாழ்)

**லெப். நியாஸ்** (செல்வரத்தினம் சங்கர் - கைதடி, நுணாவில், சாவகச்சேரி - யாழ்)

**2-ம் லெப். நரேஸ்** (சபாரட்ணம் சிவபாதம்-நெல்லியடி மேற்கு, கரவெட்டி - யாழ்)

**ஜெயராமன்** (சந்திரசேகரம் உதயகுமார் - கைதடி கிழக்கு, சாவகச்சேரி - யாழ்)

**கம்பன்-சக்தி** (நா. கனகராஜ சத்தியகுமார்-காஞ்சிபுரம் வீதி, மாதகல் - யாழ்)

யாழ் - வீமன்காமம் பகுதியில் தேசவிரோதிகளினால் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டு எமைப்பிரிந்த,

**ரஜீவன்** (குமாரசாமி ஜெபக்குமார்-புங்குடுதீவு-யாழ்)

ஆ. க. வெ. நடவடிக்கையின் போது சிறிலங்கா விமானப்படையினரின் குண்டுவீச்சின் போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**தேவன்** (சிவஞானம் சிறியானந்தம்-கல்வளை - சண்டிலிப்பாய்)

1993-ம் ஆண்டு தென்மராட்சி-எழுதுமட்டுவாள் பகுதியில் எதிர்பாராதவிதமாக ஏற்பட்ட வெடிவிபத்தில் எமைப்பிரிந்த,

**கப்டன் வதனி** (சியாமளாதேவி இரத்தினம் - இரணைமடுச்சந்தி-கிளிநொச்சி)

வட்டுக்கோட்டை - சித்தங்கேணிப் பகுதியிற் சிறிலங்கா விமானப்படையினர் மேற்கொண்ட விமானக் குண்டுவீச்சில் பலியான தெல்லிப்பழையைச் சேர்ந்த ஒரு மாணவன்

தெல்லிப்பழைப் பகுதியில் வீடு பார்க்கச் சென்ற போது சிறிலங்கா இராணுவத்தினரால் சுடப்பட்டுப் பலியான பொதுமகன்.

**ஆகியோரை இந்நாளில்**

**நினைவு கூருகின்றோம்.**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-9993)

# 3-ம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு:
28-04-1973

வீரச்சாவு:
30-07-1991

**வீரவேங்கை கப்பன் / சத்தி**
நா. கனகராசா சத்தியகுமார்
(காஞ்சிபுரம் வீதி மாதகல்)

விண்ணுலகில் வீற்றிருக்கும் எங்கள் செல்வமே
நீ மறையவில்லையடா எங்கள் நெஞ்சில்
வீற்றிருக்கின்றாய்
நீ சாகவில்லையடா - நீ
சத்தியப் போரிலே மறைந்து விட்டாய்

சங்கரத்தை,
வட்டுக்கோட்டை. (8954)

அப்பா, அம்மா, தங்கை,
தம்பிமார்.

# "காற்றாகிப் போனாலும் கலையாத நான்காண்டு நினைவலைகள்"



வித்தாக மடியில்:
1974 - 04 - 27

விதையாகி மண்ணில்:
1990 - 07 - 30

**வீரவேங்கை கானகன்**
(கதிரவேலு சதீஸ்குமார்)

ஆண்டு நான்கானதடா - உன்
அழகு முகம் மறையவில்லை
ஆண்டவனை வேண்டுகின்றோம் - நீ
மீண்டும் பிறந்து வர......
கடல் நீரும் வற்றிவிடும் - எம்
கண்ணில் நீர் வற்றவில்லை,
எண்ணிரண்டு வயதினிலே - நீ
[illegible]

## சத்துணவு வழங்கல்

(தொல்புரம்)

சுழிபுரம் பண்ணாகம் பகுதிகளில் போசாக்கு இன்மையால் நிறை குறைந்த சிறுவர்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டு வருகிறது.

சங்கானை மேற்கு ஆரம்ப சுகாதார கவனிப்புத் தொண்டர் அமைப்பினால் நடைமுறைப் படுத்தப்பட்டுவரும் மேற்படி சத்துணவுத் திட்டத்திற்கு அமைவாக கடந்த வியாழன் அன்று பண்ணாகம், பனிப்புலம் சுற்றாடலை சேர்ந்த எடை குறைவான வறிய குழந்தைகளுக்கு சத்துணவாக ஜீவாகாரம் வழங்கப்பட்டது. (41)

## தையல் தொழிலகம்

(தொல்புரம்)

பெண்களுக்கான சுயதொழில் வேலை வாய்ப்பினை மேம்படுத்தும் பொருட்டு சங்கானை நகரப்பகுதியில் தையல் கலை தொழிலகம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிமேற்கு பிரிவு சங்கானை தெற்கு [illegible] னால் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி தையல் தொழில் நிலையத்தில் பெண்களுக்கான ஆடைகள், மாணவ மாணவிகளுக்கான சீருடைகள் நவீன தொழில்நுட்பதிறன்மிக்க பயிற்சியாளர்களினால் தைத்து வழங்கப்படுகிறது. குறைந்த செலவில் நிறைந்த பயனைப் பெறவுள்ள மாணவமாணவியருக்கும், வறிய குடும்பத்தவர்களுக்கும் இந்த சிறப்புப் பணியினால் நல்ல வாய்ப்பு எட்டியுள்ளது. (41)

## திருநாட் திருப்பலி

மானிப்பாய் புனித அன்னாள் ஆலய வருடாந்த உற்சவத்தில் நாளை ஞாயிறு காலை 7 மணிக்கு திருநாட் திருப்பலியும் திருச்சுருபப் பவனியும் அன்னாளின் ஆசியும் இடம்பெறும்.

## 27 ஆயிரம் அட்டைகள்

உற்பத்திசார் நடவடிக்கைகளைமேம்படுத்தும்பொருட்டு [illegible]

# சங்கானை கோட்டத்தில் கணித பாட மதிப்பீடு

(தொல்புரம்)

சங்கானை கல்விக் கோட்டப் பாடசாலைகளில் ஆண்டு 6-ல் கல்விபயிலும் மாணவர்களுக்கு கணித பாட அடைவை மதிப்பீடு செய்யும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்படி கல்விப் பகுதியினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சிறப்புப்பணியானது அங்குள்ள பாடசாலைகளில் ஆண்டு 6-ல் கல்வி பயிலும் மாணவர்களின் கணித பாடத்தை மதிப்பீடு செய்து, அதற்கு ஏற்ப பரிகாரக் கற்பித்தலை அந்தந்தப் பாடசாலைகளிலும் மேற்கொள்ளு முகமாக அண்மையில் கணித பாடமதிப்பீட்டு பரீட்சை ஒன்று நடாத்தப்பட்டது. இந்த பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய மாணவர்களுக்கு பரிகாரக் கல்வி கற்பிக்கப்படவுள்ளது. (41)

# பல்கலைக்கழக அணி 2-1 கோல் கணக்கில் வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக அணியினருக்கும் இளவாலை யங் கென்றிஸ் அணியினருக்கும் இடையில் இடம்பெற்ற உதைபந்தாட்டப்போட்டியில் பல்கலைக்கழக அணி 2-1 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

யாழ். ரோட்டரிக் கழகம், எஸ்.எம். பெர்ணாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் நடாத்தப்பட்ட உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் பல்கலைக்கழக அணியின் சார்பில் விளையாடிய அன்ரன் சிசில் மிகவும் திறமையாக விளையாடினார்.

யாழ் பல்கலைக்கழக புதிய விளையாட்டு மைதானத்தில் விறுவிறுப்பாக இடம் பெற்ற உதைபந்தாட்டத் தொடரில் பல்கலைக்கழக அணித்தலைவர் எஸ். ஈ. கென்றிசன் இரண்டு கோல்களைப் போட்டு வெற்றியை ஈட்டிக்கொடுத்தார். (05)

# திறந்த வாகன பிரசாரம் பொலிசார் தடை

(கொழும்பு)

திறந்த வாகனங்களில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள வேண்டாம் என பொலிசார் வேட்பாளர்களை கேட்டுள்ளனர். இதனால் போக்குவரத்து தடை ஏற்படுவதாகவும், இவ்விதமான தேர்தல் பிரசாரத்தை இதனால் தடுக்க முடிவெடுத்திருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.


யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை

**அறிவித்தல்**

சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா-பிற்போடல்

31-07-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ் இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடாத்த இருந்த சர்வதேச கூட்டுறவாளர் தினவிழா தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது. இதற்கான திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(சி-10003) -பதிவாளர்

**தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்**

யாழ். மாவட்டம்

உறுப்பினர் கவனத்திற்கு


# 22 தற்காலிக ஊழியர் மாநகரசபை நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையினால் சுமார் 22 தற்காலிக பொது சுகாதாரத் தொழிலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சை யாழ் மாநகரசபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்படி இவ் 22 சுகாதாரத் தொழிலாளர்களுக்கும் நேற்றில் இருந்து நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக அவ் வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே யாழ் மாநகர சபையில் நிலவிவந்த சுகாதாரத் தொழிலாளர் பற்றாக் குறையை அடுத்தும் நல்லைக் கந்தன் ஆலய வருடாந்த உற்சவத்தை முன்னிட்டும் இவர்கள் நியமனஞ் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. (பா)

# சுயவேலை வாய்ப்பிற்கு இலவச தையல் பயிற்சி

(தொல்புரம்)

பெண்களுக்கான சுயவேலை வாய்ப்பினை அதிகரிக்கும் பொருட்டு இலவச தையல் பயிற்சி வகுப்புகள் தேசிய சர்வோதயத்தினரால் வலிமேற்கில் ஆம்ரபிக்கப்பட்டுள்ளன.

வலிமேற்கு சங்கானை பிரதேச நிலையத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்த இலவச வகுப்புகளில் தையல் கலை, சிகையழகு அலங்கரிப்பு, கேக் ஐசிங், பூ வேலைகள் போன்றவற்றிற்கான பயிற்சிநெறிகள் சிறந்த முறையில் வழங்கப்படுகின்றன இப்பயிற்சி நெறிகளில் பங்குபற்ற விரும்புவோர் சித்தன்கேணியிலுள்ள சர்வோதய பிரதேச நிலையத்தில் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்கப்படுகின்றனர். (41)


# தேவை

1. **தொழில் முகாமையாளர்**
(Works Manager)
அச்சக வேலைகளில் அனுபவம் உள்ள ஆண்கள் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்.

2. **அச்சு இயந்திர இயக்குனர்**
(Machine Minder)
சைனா பிளேட்டின் மெசின் இயக்கி அனுபவம் உள்ளவர்கள் தகைமைகளுடன் விண்ணப்பிக்கவும்.

சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

வி. இல. 342 மே/பா ஈழநாதம்,
மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(சி-9998)

# தேவை

லான்ட்மாஸ்ரர் பெட்டி

நல்ல நிலையிலுள்ள, நன்றாக பாரம் இழுக்கக் கூடிய பெட்டி ஒன்று விலைக்குத்தேவை.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலகம்,
கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-10005)

கண்ணில் நீ வேறுவில்லை,
எண்ணிரண்டு வயதினிலே - நீ
இன்னுயிரை உவந்தளித்தாய்,
மண்ணுலகம் போற்றிடவே - நீயும்
மாவீரனாகி விட்டாய்,
எண்ண மெல்லாம் உன் நினைவாய் - நாம்
ஏங்குகிறோம் ஈழமதில்......

காவகன் வீதி, உன் நினைவில் வாழும்
வேம்பிராய், பெற்றோர்,
மீசாலை. (8902) சகோதரர்

# ஓராண்டு நினைவஞ்சலி



தோற்றம்

9. 10. 1946

மறைவு

10. 8. 1993

அமரர்

## பாலசுப்பிரமணியம் மேகவர்ணன்

திதி:- 30. 7. 1994

அன்பின் திருவுருவே! பண்பின் உறைவிடமே
பாசத்தின் இருப்பிடமே! குடும்பத்தின் குலவிளக்கே
எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு
மீளாத் துயில் கொண்ட எங்கள் அன்புத் தந்தையே
நீங்கள் எம்மைப் பிரிந்து இன்றுடன் ஓராண்டு
பூர்த்தியாகி விட்டாலும் உங்கள் அன்பு முகம்
ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும் மறையவே
மறையாது

தங்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

நித்தமும் உங்கள் நினைவால் துயருறும்
கே.கே. எஸ். வீதி, மனைவி, பிள்ளைகள்,
வல்வெட்டித்துறை. மருமகன், உறவினர்,
(8803) சகோதரங்கள்.

உற்பத்திசார் நடவடிக்கைகளைமேம்படுத்தும்பொருட்டு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் இதுவரையாழ் மாவட்டத்தில் 27,000 கமக்கார அறிமுக அட்டைகள்விநியோகிக்கப்பட்டுள்ளன.

2, ம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்பு வடதமிழீழத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே விவசாய உள்ளீடுகள், கமஇரசாயனங்கள், உரவகைகள், எரிபொருட்கள், என்பன கிடைக்கப்பெற்றதுடன் கிடைக்கப்பெற்ற உள்ளீடுகள் கூட சரியான முறையில் உரிய காலத்திற்கு வழங்கப்படாமல் விவசாயிகள் பாதிப்படைந்தனர்.

## விவசாய பயிற்சிவகுப்பு

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் விவசாய திணைக்களத்துடன் இணைந்து விவசாய பயிற்சி வகுப்புக்களைப் பரவலாக நடாத்தி வருகின்றது. யாழ்- மாவட்டத்தில் கடந்த ஆனி மாதத்தில் மட்டும் 12 பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்றன. இப்பயிற்சி வகுப்புக்களில் 322 க்கு மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

இப்பயிற்சி வகுப்புகளில் நடைமுறை விவசாய பிரச்சினைகளும், அவற்றுக்கான தீர்வுகளும் திருத்திய பயிர்ச் செய்கை முறைகள், பயிர்பாதுகாப்பு பற்றி விளக்கங்கள் அளிக்கப்பட்டன. தொடர்ந்தும் இப்படியான பயிற்சி வகுப்புக்கள் நடைபெற உள்ளதாகவும் இப்பயிற்சி வகுப்புக்களில் சகல விவசாயிகளும் பங்கு பற்றி பயன் அடையுமாறு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் செய்திக் குறிப்பொன்றின் மூலம் கேட்டுள்ளது.

### உறுப்பினர் கவனத்திற்கு

சந்தா பண நிலுவை உள்ளவர்களுக்கு யூலை மாதம் வரை சலுகையுடன் இறுதிச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தது.

இதுவரை செலுத்தி முடிக்காதவர் மீது ஆகஸ்ட் 03ஆம் தேதி முதல் கடும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

**செலுத்தாதவர்களின் நிறுவனம் பூட்டப்பட்டு சந்தா முழு நிலுவையும் ஒரே தடவையில் கட்டி பற்றுச்சீட்டு பெற்ற பின்னரே தொடர்ந்தும் இயங்க அனுமதி வழங்கப்படும்.**

குறிப்பிட்ட திகதிக்கு முன் தங்கள் நிலுவைகளை செலுத்தி சிரமங்களை தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**சகல கோட்டங்களின் பொருளாளர்களுக்கான மிக முக்கியமான வேண்டுகோள்**

தங்கள் கோட்ட எல்லைக்குட்பட்ட நிறுவனங்களின் சந்தா நிலுவை விபரங்களை உடனடியாக எமது செயலகத்தில் ஒப்படைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

பொதுச்செயலாளர்
(சி-10004) யாழ். மாவட்டம்

# முக்கிய அறிவித்தல்

## வலி-கிழக்கு வர்த்தகர் சங்கம்

(கோப்பாய் வட்டம்)

### வருடாந்த பொதுக் கூட்டம் பிற்போடல்

இன்று 30-07-1994-ந் திகதி சனிக்கிழமை நடைபெறவிருந்த மேற்படி பொதுக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணமாக பிற்போடப்பட்டுள்ளது. திகதி பின்னர் அறிவிக்கப்படுமென்பதை அறியத்தருகின்றோம்.

த. பரராசசிங்கம் அ. நாகேஸ்வரன்
தலைவர் செயலாளர்
(8964)

(சி-10005)

இளங்கலைஞர் மன்ற

# மாதாந்த இசை நிகழ்ச்சி

ஆதரவு: வசந்தாஸ்
இல. 15, யாழ். பஸ்நிலைய முன்பாக

இடம்: மன்றக் கலாமண்டபம், சட்டநாதர் வீதி,
நல்லூர்.

காலம்: 30-07-1994 சனி மாலை 5 மணி

நிகழ்ச்சி நிரல்

**மாலை 5.00 - 5.30 பாட்டு**
செல்விகள்: ச. கோகிலா, ப. மதிவதனி, ந. சசிகலா
வே. தாரணி, கு. கனலச்செல்வி,
ப. மலர்விழி, கு. ஷாமினி, நா. காயத்திரி
ம. ஸ்ரீஜனனி, நா. விஜிதா.
செல்வி ரி. சந்தானலெட்சுமி - வயலின்
செல்வன் எம். சஜன் - மிருதங்கம்

**5.30 - 6.20 வீணையிசை**
திருமதி சங்கரி இராஜேந்திரன் - வீணை
திரு. கே. கண்ணதாஸன் - மிருதங்கம்

**6.20 - 7.20 பாட்டு**
திருமதி யசோதா ஸ்ரீகுமரன் - பாட்டு
திரு. ஆர். எஸ். கேசவமூர்த்தி - வயலின்
திரு. எஸ். துரைராசா - மிருதங்கம்

**7.20 - 7.45 மங்களவிளக்கேற்றல்**
திரு. இராசாவாமதேவன் அவர்கள் (இராசா டீசல் எஞ்ஜினியேஸ்)
திரு. சி. மகாதேவா அவர்கள், வர்த்தகர்
வசந்தாஸ், யாழ்ப்பாணம்.
தலைமையுரை: வாகீச கலாநிதி கனகசபாபதி
நாகேஸ்வரன் அவர்கள்
பிரதம விருந்தினர் உரை: சுதாமிர்தவாரிதி,
திரு. செ. சத்தியமூர்த்தி அவர்கள்
சிறப்பு விருந்தினர் உரை: எஸ். வி. முருகேசு அவர்கள்,
பிரபல வர்த்தகர்

**7.45 - 8.45** செல்வி மைதிலி அம்பலவாணரின்
மாணவிகள் அளிக்கும்
**பரதநாட்டியம்**

**8.45 - 9.45 இசைநாடகம்:**
கலை பண்பாட்டுக் கழகத்தின் ஆதரவில்
சி. தனபாலசிங்கம் அவர்களின்
**"மரணத்தை வென்றவர்கள்"**
(பாரம்பரிய இசைவடிவ நாடகம்)

கலாரஸிகர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்!

30-7-94 (சி-10001)

# நீங்காத நினைவுகள்



**வ. இ. சிவஞானசுந்தரம்**

பிறப்பு: 13-12-1938

இறப்பு 08-4-1967

வல்வையில் பொலிசாரின் துப்பாக்கிச்சூட்டில் மரணமானவர்



**வ. வ. இராமசாமிப்பிள்ளை**

மண்ணில் 11-3-1898

விண்ணில் 26-9-1986

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன் கோவிலில் 50 வருடம் தலைவராக இருந்தவர். கப்பலோட்டிய தமிழனாக விளங்கியவர்



**கப்டன் அலன்**

(ந. பாக்கியலிங்கம்)

பிறப்பு 06.5.1962

வீரச்சாவு 26 5-1987

ஒப்பிரேசன் லிபரேசன் நேரடிமோதலில் வீரச்சாவடைந்தார்.







கண்ணை இமை காப்பதுபோல் எம்குடும்பம்
வண்ணமுறக் காத்து நின்றாய்

சிங்களப் பேரினக் கொடுஞ்செயல் கண்டனம்
சிதறிய தமிழரின் உயிர்களைப் பறித்ததில்
தன்னுயிர் ஈந்தநல் மைத்துனர் பாதையில்
சென்றநம் தாயேநீ வருவதுதா னெப்போசொல்

(நாராயணமூர்த்தி கலாராணி)

ஈகச்சுடர்ஏற்றி - நெஞ்சம் நெகிழ்ந்தனை
இன்பத் தமிழுக்காய்த் தனையே ஈந்தவன்
கப்டன் அலனுடன் விண்ணகம் சென்றனை-நாளை
காக்குமுன் பிள்ளையின் மடிதனில் தவழாயோ!

(ரவிந்திரதாஸ் செல்வராணி)

ஆண்டொன்று போனாலும் அம்மாவுன் நினைவுதான்
ஆறுமோ எம்துயர் கனவிலும் நினைவிலும்
கண்களை நிறைக்குமே கண்மணித் தாயே நீ
கனிவுடன் பார்த்தனை காத்திடுவா யம்மா நீ
சிரித்த முகத்துடன் தெருவினில் வருவாய்
சிந்தை மகிழவே கதையும் சொல்வாய்.

(சண்முகலிங்கம்-விஜயலிங்கம்)



கண்ணை இமை காப்பதுபோல் எம்குடும்பம்
வண்ணமுறக் காத்து நின்றாய்
எண்ணி வரும் துயரமனத நீக்கிடவே
அண்மையிலே நீ யிருந்தாய் - இன்று
தண்ணீரில் சங்கமித்த திருவுருவே உனையிழந்து
துயரமதில் துடிக்கின்றோ மம்மாவே.

(காசிலிங்கம் கிருஸ்ணகுமாரி)

அன்னை மகமாரி அருள்சொரியும் வல்வையிலே
உந்தன் மாமனோ ஊரறிந்த வள்ளலம்மா
இன்ப முகத்தோடு மன்னவனாய் வாழ்ந்தவரின்
மருமகளே மரிக்கொழுந்தே மங்கையர் திலகமே
தென்னுலகு சென்றுநும் பணியினைத் தொடரவோ
கொடுங்காலன் அழைத்தனன் கிளாலிப் பயணத்தில்

(நடராஜலிங்கம் சாந்தினி)

தேவை அறிந்து நீ ஓடிவலம் வருவாய்
சீறும் போர்க்குணம் கண்டு நாமறியோம்
பிரிந்து போகுமுன் கிளாலிப் பாதையில்
போய்வருவே னென்றவுன் வார்த்தையும் பொய்யோ
ஆசை முகங்காட்டி அரைநொடியில் சென்றனையே
இரவு பகலாய் அழுகின்றோம் துடிக்கின்றோம்
மாசிலா மணியே முத்தேயெம் இரக்கினமே
சென்று வர விடையீந்தோம் கண்மணியே போய்வா

(சந்திரலிங்கம் சீலாவதி)

- O அன்பின் திருவுருவாய்
- O அழியா ஓவியமாய்
- O திருவுடை மனையாளாய்
- O தூய அன்னையாய்

# நடனசிகாமணி இரத்தினேஸ்வரி

**அன்பின் மலர்வு 03-06-1935 அகால உதிர்வு 10-8-1993**

**திதி - 30 - 07 - 1994**

- O பரிவுடை மாமியாய்
- O பாசமிகு பேர்த்தியாய்
- O உற்றார்க் குறுதியாய்
- O ஊருக்குதவியாய்

வாழ்ந்த நம்குலக்கொழுந்து

## ஓராண்டு மதியபோசன அழைப்பு

**30.07.1994 (சனிக்கிழமை) வல்வை அம்மன் கோயிலடி கப்டன் அலன் வீதியில் அமைந்துள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஓராண்டு திவசத்திலும், மதிய போசனத்திலும் பெருமனதுடன் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள், அன்புக்கினிய போராளிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திப்போமாக.**

ஓம் சாந்தி...! சாந்தி..! சாந்தி...!

**வ.இ.நடனசிகாமணி (மணியண்ணா)**
**குடும்பத்தினர்**
**உற்றார், உறவினர்கள்**

கப்டன் அலன் வீதி, அம்மன் கோயிலடி,
வல்வெட்டித்துறை.
30-7-94

(8947)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்
நல்லூர் கிளை நூலகம்.



## சிந்தனைக்கு..

எண்ணியார் எண்ணம் இழப்பர் - இடனறிந்து
துன்னியார் துன்னிச் செயின்.

- திருக்குறள்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 30-07-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024
தபால் பெட்டி எண்- 05

## அறிவிற்கும் - அரசியலுக்கும் இடையிலான முரண்பாடு

''விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் தற்பொழுது கெரில்லா யுத்தத்தை மேற்கொண்டு வருகின்றார். அணு ஆயுதத்தைக் கொண்டுள்ள அமெரிக்கா போன்ற நாடுகளால் கூட இவ்வாறான யுத்தத்தில் வெற்றி பெற முடியாது.'' இவ்வாற'க மகாவலி அபிவிருத்தி அமைச்சர் காமினி திசாநாயக்கா தனது அரசியல் ஞானத்தை வெளிக்காட்டியுள்ளளார்.

அமைச்சர் காமினி திசாநாயக்காவின் இக்கூற்று உலக வரலாற்றின் அடிப்படையிலானதாகும். கெரில்லாப் போராட்டத்திற்கு எதிரான போராட்டத்தில் அணு வல்லரசுகள் தோற்றமைக்கு ஒன்றல்ல பல உதாரணங்கள் உள்ளன. இதில், அமெரிக்கா வியட்னாமில் தோற்றமையும், முன்னாள் சோவியத் யூனியன் ஆப்கானிஸ்தானில் தோற்றமையும் அவ் வல்லரசுகளின் இராணுவ அரசியல் வரலாற்றில் கறை படிந்த அத்தியாயங்கள் எனலாம்.

இதேசமயம் அமெரிக்கா போன்ற இவ் வல்லரசுகள் தனியாக அணுவாயுதத்தை மட்டும் கொண்டவையல்ல என்பதும், நவீனப்படுத்தப்பட்ட ஆயுததளபாடங்களுடன் கூடிய பல இலட்சக்கணக்கான துருப்புக்களையும் கொண்டவை என்பதோடு இந்நாடுகள் பலமான பொருளாதார அமைப்புக்களை கொண்டவையும் ஆகும்

ஒரு நாட்டின் பொருளாதாரம் யுத்தத்திற்கு எத்துணை தேவையானது என்பதை சொல்லிப் புரிய வேண்டியிருக்காது. ஆனால், அமெரிக்கா போன்ற வலுவான பொருளாதார நிலையில் உள்ள நாடுகளின் பொருளாதாரத்தையே பாதிக்கும் வகையில் கெரில்லாப் போராட்டங்கள் இருந்ததுண்டு. அந்தளவிற்கு கெரில்லாப் போராட்டங்கள் வலுமிக்கவையாகும்.

இதேசமயம், உலகின் பல பாகங்களில் கெரில்லாப் போராட்டங்கள் நடைபெறுகின்ற போதும் அவை யாவும் வியட்னாம் போராட்டம் போன்றோ, அன்றி ஆப்கானிஸ்தான் போராட்டம் போன்றோ இருந்ததில்லை. பொதுவாக எல்லா இடங்களிலும் கெரில்லா போராட்டங்கள் அழிக்க முடியாதவையாக இருக்கலாம். ஆனால், சிலசம

# சர்வானந்தா நிராகரிப்பிற்கு சிறிமாவின் எதிர்ப்பே காரணம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேசியப் பட்டியலில் சர்வானந்தாவின் பெயர் இடம் பெறாமைக்கு திருமதி சிறிமாவோ 'பண்டாரநாயக்காவின் கடும் எதிர்ப்பே காரணம் என அரசியல் வட்டாரங்களில் இருந்து தெரிய வந்துள்ளது.

மேல்மாகாண சபையின் ஆளுநராக இருந்த சர்வானந்தா அண்மையில் ஜனாதிபதி 'டி. பி. விஜேதுங்காவால் தூக்கி எறியப்பட்டது தெரிந்ததே.

இதனால் ஆத்திரமடைந்திருந்த சர்வானந்தா பொதுஜன முன்னணியுடன் இணைந்து பாராளுமன்றம் செல்லத் திட்டமிட்டிருந்தார். இக்கட்சியின் தேசியப்பட்டியலில் இடம் பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். இதற்கு சந்திரிகா குமாரணதுங்காவிடமிருந்து சாதகமான பதில் கிடைத்திருந்தது. பின்னர் இவ்விடயம் குறித்து திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவிடம் கட்சியினர் எடுத்துக் கூறியபோதே அவர் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்ததாகத் தெரிய வந்துள்ளது.

ஜே. ஆர். ஜெயவர்த்தனா ஆட்சியில் நீதியரசராக திரு. சர்வானந்தா இருந்தபோதே திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடியுரிமை பறிக்கப்பட்டது. இதற்கு பழிவாங்கும் செயலாகவே தேசியப்பட்டியலில் இடம் கொடுக்க சிறிமா மறுத்திருக்கலாம் என அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

# தேர்தல் சட்டம் மீறப்படுகிறது ஆணையாளருக்கு முறைப்பாடு

(கொழும்பு)

தேர்தல் சட்டவிதிகள் பரவலாக மீறப்பட்டு வருகிறது என்று தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி.சில்வாவுக்கு பெருமளவு முறைப்பாடுகள் தொடர்ந்து கிடைத்த வண்ணம் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்த மீறல்களைக் கட்டுப்படுத்தி சுதந்திரமானதும், நியாயமானதுமான தேர்தல் நடைபெறுவதை உறுதிப்படுத்துவது பொலிசாரின் பொறுப்பேயாகும் என்று தேர்தல் ஆணையாளர் பொலிஸ் திணைக்களத்திற்கு மீண்டும் நினைவுபடுத்தியுள்ளார்.

இதேவேளை தேர்தல் சட்ட விதிகளை மீறுவோர் தொடர்பாக கடும் நடவடிக்கைகளை எடுக்கும்படி பொலிஸ்மா அதிபர் பிராங்க் டீ சில்வா சகல பொலிஸ் நிலையங்களுக்கும் விசேட பணிப்புரை விடுத்துள்ளார்.

## தேர்தல் கடமையில் கல்விச்சேவை ஊழியர்

(கொழும்பு)

பாடசாலை ஆசிரியர்கள் உட்பட கல்விச்சேவையை சேர்ந்த பத்தாயிரத்திற்கும் அதிகமானவர்கள் தேர்தல் கடமையில் ஈடுபடுத்தப்பட இருப்பதாக தெரிய வருகின்றது.

இதேவேளை தேர்தல் கடமைகளில் ஈடுபடும் நபர்களின் இடங்கள் தொடர்பாக இதுவரை அறிவுறுத்தல்கள் கொடுக்கப்படவில்லை என்றும் 5000 பாடசாலைகளில் தேர்தல் வாக்களிப்பு இடம்பெற இருப்பதாகவும் தெரியவந்துள்ளது.

## கொலன்ன ஐ. தே. க. மேடை சரிவு

## பலமற்ற தரைப் பரப்பில் அமைந்ததே காரணமாம்

(கொழும்பு)

எம்பிலிபிட்டிய கொலன்ன பகுதியில் அமைக்கப்பட்டிருந்த ஐ. தே. க. மேடை பலமற்ற தரைப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்தமையினால் சரிந்து வீழ்ந்ததாக கொழும்பு பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

மேடையில் ஜனாதிபதி ஏறுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்பே மேடை பலமற்ற தரைப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்ததை அவதானித்த ஜனாதிபதி விஜேதுங்காவின் தலைவரான டி. ஐ. ஜி. பாலசூரிய இது குறித்து உடனடி நடவடிக்கை எடுப்பதற்காக இம்மேடையை அமைத்த கண்ராக்டரிடம் விரைந்தார். இவ்வேளையில் ஜனாதிபதி மேடையில் ஏறினார்.

கூட்டம் ஆரம்பித்து சில நிமிடங்கள் கழித்து மேடையில் இருந்த சில பிரமுகர்கள் மேடை நகர்வது போல் தாம் உணர்வதாக குறிப்பிட்டனர். அச்சமயமே மேடை திடீரென அனைவருடனும் கீழே சரிந்து வீழ்ந்தது என அப்பத்திரிகை

## அப்பள உற்பத்தி அதிகரிப்பு

வன்னி மாவட்டத்தில் அப்பள உற்பத்தி பெரும் வெற்றி அளித்து வருவதோடு இதை கிராம ரீதியாக விரிவு படுத்துவதற்கான முயற்சியில் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது

தற்பொழுது திருநகரில் உதயம் நிறுவனமும் வட்டக்கச்சியில் சுரபி நிறுவனமும் உற்பத்தி செய்து வருகின்றது' இங்கு மாதம் ஒன்றுக்கு 10,000 அப்பளக்கட்டுகள் உற்பத்தியாகின்றன. இவ் உற்பத்தியினால் உழுந்து சந்தை வாய்ப்பை பெற்றதோடு பலர் வேலைவாய்ப்பையும் பெற்று உள்ளூர் உற்பத்தியையும் ஊக்குவிக்கின்றார்கள். கொழும்பிலிருந்து ஏராளமான பொதிகள் அப்பளம் வருவதும் இதன் மூலம் எமது பணம் கொழும்புக்குச் செல்லலும் தடுக்கப்பட்டுள்ளது.

இளம்பெண்ணை

## தாய்மையாக்கி கைவிட்ட நபருக்கு நீதிமன்று தண்டம்

(யாழ்ப்பாணம்)

பதினைந்து வயதுப் பெண் ஒருவரை காதலித்து தாய்மையாக்கி கைவிட்ட குடும்பஸ்தர் ஒருவருக்கு யாழ்ப்பாண தமிழீழ மாவட்ட நீதிமன்றம் ஐம்பது ஆயிரம் ரூபா பணம் குழந்தையின் நலனுக்காகவும் ஐயாயிரம் ரூபா பணம் தண்டமாகவும் குற்றவாளியிடமிருந்து அறவிடப்படும் என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

வீட்டில் பெற்றோர் இல்லாத சமயம், மாமா முறையான எதிராளி மேற்படி இளம் பெண்ணை காதலித்து தாய்மையாக்கியுள்ளார்.

நாவலடி, அரியாலையைச் சேர்ந்த வி. சிவலிங்கம் என்ற ஏற்கனவே திருமணமான நபர் மீது யாழ்ப்பாண நீதிமன்றத்தில் வழக்கு பதிவாகியிருந்தது. சமீபத்தில் இதன் தீர்ப்பு வெளியானது. இதன்படி மேற்படி பணம் அறவிடப்படும் என தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. [தி]

## நீதிமன்றில் ஏலம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில் எதிர்வரும் 6 ஆம் திகதி காலை 9-30 மணிக்கு பொருள்கள் ஏலத்தில் விடப்படவுள்ளன.

உரிமை கோரப்படாததும், பறிமுதல் செய்யப்பட்டதுமான பொருள்கள் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(தி)

## பரீட்சார்த்திகள் குறைவு

இவ்வாண்டு க. பொ. த உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது. இந்தப் பரீட்சைக்கு இம்முறை 1 லட்சத்து 8ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர். இவர்களில் 45 ஆயிரம்பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகளாவர் என தெரிவிக்கப்படுகிறது.

## விளையாட்டுப் போட்டி

இன்று சனி ஆனைக்கோட்டை(?) உயரப்புலம் அடைக்கல நாயகி பாலர்பாடசாலை விளையாட்டுப்போட்டியினையும், கலை நிகழ்ச்சிகளையும் நடாத்துகின்றது.

## நீர் விநியோகத்திற்கு புதிய தண்ணீர்பவுசர்

யாழ் மாநகரசபை அதன் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குள் குடிநீர்விநியோகத்தினை விரிவுபடுத்தும்நோக்கில் புதியதொரு தண்ணீர்பவுசரை நீர் விநியோகப்பகுதியில் இணைத்துள்ளது.

யாழ் மாநகரசபையின் மராமத்து பொறியியலாளர் மா. இராமதாஸ் இதனை வடிவமைப்புச் செய்துள்ளார்

இதற்கான மொத்தச் செலவாக சுமார் ஒரு இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக யாழ் மாநகர சபை வட்டாரங்கள் தெரிவித்தன.

இப்பவுசர் தற்சமயம் உள்ளூர்த்தண்ணீர் விநியோகத்தினை மேற்கொண்டுவருவதாக அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (பா)

## பிற்போடப்பட்டது

வேல் ஆனந்தன் குழுவினரின் முழங்கும் முரசு நாட்டிய நாடகம் பின் போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் 6-ம் திகதி புனித மரியாள் வித்தியாலய அரங்கிலும் 8ஆம் திகதி யாழ் இந்து குமாரசாமி மண்டபத்திலும் நடைபெறும்.

## முன்னோட்ட அரங்கு

நல்லூர் ஸ்தான சிசிதக. பாடசாலையின் வைரவிழா முன்னோட்ட அரங்கு பாடசாலை விடிவெள்ளி அரங்கில் நாளை ஞாயிறு மாலை 3 மணிக்கு நடைபெறும்.

## மகோற்சவம்

நல்லூர் சட்டநாதர் ஆலய

## ஒலிப்பதிவு நாடா வெளியீடு

[யாழ்ப்பாணம்]

நல்லை முருகன் பாடல்கள் (பாடல் ஒலிப்பதிவு நாடா) வெளியீட்டு விழா எதிர்வரும் மூன்றாம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர்

தான் போராட்டம் போன்றோ இருந்ததில்லை. பொதுவாக எல்லா இடங்களிலும் கெரில்லா போராட்டங்கள் அழிக்க முடியாதவையாக இருக்கலாம். ஆனால், சிலசமயம் அவை அரசுகளுக்குப் பெரும் அச்சுறுத்தலாகவோ, பாதிப்புக்களை ஏற்படுத்துபவையாகவோ இல்லாமல் இருப்பதும் உண்டு.

இவ்வாறான போராட்டங்கள் வலுப்பெறாமைக்கு போராட்டத்திற்கானகாரணம் வலுவற்றதாகவோ, அன்றி மக்கள் ஆதரவற்றதாகவோ இருக்கலாம். இல்லாது போனால் அர்ப்பணிப்புடன் கூடிய போராளிகள், சரியான தலைமை கிடைக்கப் பெறாது இருக்கலாம். சரியான செயற்பாடு இல்லாது போனால் எத்தகைய வசதி வாய்ப்புகள் கிடைக்கப் பெறினும் போராட்டம் வெற்றி பெறப் போவதில்லை என்பதும் உலகம் உணர்த்தும் மற்றொரு பாடமாகும்.

ஆனால், இந்த வகையில் காமினி திசாநாயக்கா கூறியது போன்று அமெரிக்கா போன்ற அணுவாயுத வல்லரசுகளினால் கூட தோற்கடிக்க முடியாதது போன்ற கெரில்லாபோராட்டத்திற்கு ஒப்பானஅளவிற்குவிடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டம் உள்ளது எனக் கூறினால் மிகையில்லை.

விடுதலைப் புலிகள் தலைமையில் நடக்கும்தமிழீழ விடுதலைப் போராட்டம் நியாயபூர்வமானது. தமது தாயகத்திற்காகவும், இனத்திற்காகவும் போராடுதல் இன்று உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்றாகவே உள்ளது. இந்த வகையில் தமிழரின் மண்மீட்புப் போரானது ஓர் ஆக்கிரமிப்புப் போரோ அல்லது அர்த்தமற்ற போரோ அல்ல. அவர்களின் உரிமைக்கான போர். இப்போராட்டத்தில் முழுமையான நியாயமுண்டு.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நடத்தும் விடுதலைப் புலிகளோ அர்ப்பணிப்பு மிக்கவர்கள். அவர்களின் அர்ப்பணிப்புக்கள் உலகிற்கே முன்னுதாரணமானவை. அவர்களின் துணிவும், மனோபலமும் எதிரியினாலேயே பாராட்டப்பட்டவை. அதேசமயம் விடுதலைப் புலிகளின் தலைமை உலகில் உள்ள கெரில்லா இயக்கத் தலைமைகளில் செயற்பாடு மிக்கதெனப் பாராட்டப்பட்டது. இத் தலைமை வகுத்துள்ள போராட்ட உத்திகள் உலக இராணுவ வரலாற்றில்புதுமையானவை.

இந்நிலையில் காமினி திசாநாயக்கா எண்ணுவது போன்று தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை ஆயுதவலிமையால் தோல்வியடையச் செய்ய முடியாது என்பது சரியானதே. ஆனால், இதை உணர்ந்து கொண்டுள்ள காமினி திசாநாயக்கா இனப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு தான் ஒரேவழி என கூறும் ஐ. தே. கவிற்குள் இருப்பதுதான் வேடிக்கையானது. அதுமட்டுமல்ல, அவரது அறிவிற்கும் அரசியல் நடவடிக்கைக்குமுள்ள முரண்பாட்டையும் வெளிக்காட்டுவதாகவும் உள்ளது.

ப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்ததை அவதானித்த ஜனாதிபதி விஜேதுங்காவின் மெய்ப்பாதுகாப்பு குழுவின் அச்சமயமே மேடை திடீரென அனைவருடனும் கீழே சரிந்து வீழ்ந்தது என அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதன் மூலம் எமது பணம் கொழும்புக்குச் செல்லலும் தடுக்கப்பட்டுள்ளது.

# றுவாண்டாவிலிருந்து பிரெஞ்சு படை வெளியேற்றம்

(கிகாலி)

றுவாண்டாவிலிருந்து பிரெஞ்சுதுருப்புகள் வெளியேறஆரம்பித்துள்ளன. ஐ நா படைகளின் பலம் அங்கு அதிகரிக்கும் வரை பிரெஞ்சுபடைகளை அங்கு தங்கி நிற்குமாறு ஐ நா பிரான்சிடம் கோரிக்கைவிடுத்தபோதும் இப்படை வெளியேற்றம் நடைபெறுகிறது.

ஆகஸ்ட் மாதத்தினுள் படைவிலக்கல் நடைபெறும் எனவும் எனினும் சில துருப்பினர் அயல் நாடான சயரில் தங்கியிருந்து அகதிகளுக்கான நிவாரணப்பணி நடவடிக்கைகளுக்கு உதவுவர் எனவும் பிரான்ஸ் அறிவித்துள்ளது.

ஐ.நா றுவாண்டாவில்பணியாற்றுவதற்காக அங்குள்ள ஐ.நா. படையின் பலத்தை அதிகரிப்பதற்காக மேலதிக படைகளைஅதன் உறுப்பு நாடுகளிடம் கோரிய போதிலும் இதுவரை 550 படையினரே அமைதிப்பணிக்காககிடைக்கப் பெற்றுள்ளனர் சோமாலியாவில் ஐ நா. அமைதிப்படைக்கு கிடைத்த அனுபவத்தை தொடர்ந்து அமைதிப்பணிக்கு நாடுகள் தமது படைகளை அனுப்பிவைக்க தயங்குவதாக ஐ. நாவின் அமைதிப் பணிகளுக்கான பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

றுவாண்டா அகதிகளை பாதுகாப்பதற்கெனவும் அங்குள்ள ஐ நா. படையை பலப்படுத்தவும் முன்னதாக பிரான்ஸ் தனது படைகளை அனுப்பியிருந்தது. தற்போது றுவாண்டாவில் பெரும்பான்மையினர் ஹூட்டு கட்சி ஒழிக்கப்பட்டு சிறுபான்மை கட்சி கிளர்ச்சியாளர்களை றுவாண்டா தேச பக்த முன்னணியினர் அங்கு புதிய அரசு ஒன்றை அமைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஐ. நா. தலையீட்டுக்கு யேமன் எச்சரிப்பு

(ஏடன்)

யேமனில் தோற்கடிக்கப்பட்ட தென் யேமன் தலைவர்களுடன் ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ. நா. ஆதரவிலான பேச்சுக்களில் தாம் பங்கேற்கப்போவதில்லை என யேமன் அரசு அறிவித்துள்ளது.

யேமன் பிரச்சினைகள் வெளியார் தலையீடு இன்றி தீர்த்துக்கொள்ளப்படும் என யேமன் வானொலியில் தெரிவிக்கப்பட்டது. யேமன் உள்நாட்டுப்போர் பற்றி பேசுவதை ஐ. நா. இத்தோடு நிறுத்திக் கொள்ள வேண்டும் என யேமன் அரசு கூறியுள்ளது

இதேசமயம் தோல்வியுற்ற தென்யேமன் துணைப்பிரதமர் பேச்சு நடத்தி சமாதானம் காணப்படாவிட்டால் வட யேமனுக்கு எதிராக கெரில்லாப்போர் மூளும் என ஜெனிவாவில் எச்சரித்துள்ளார். தென்யேமன் மக்களுக்கு முழு உரிமையும் கிடைக்கும் வரை இது தொடரும் என அவர் தெரிவித்தார்.

## பிரதிப் பிரதமரும் காலமானார்

வட கொரியாவின் பிரதி பிரதமர் கென்-ஹூ-வங்(73) நேற்று காலமானார் இவரின் மரணசடங்குகள் இன்று சனி நடைபெறும் அண்மையில் வடகொரிய ஜனாதிபதி கிம்-இல்-சுங் உம் காலமானது குறிப்பிடத்தக்கது.

## நைஜிரியாவிற்கு எதிராக பொருளாதார தடை?

### அமெரிக்கத் திட்டம்

(லேகோஸ்)

நைஜிரியா இராணுவ அரசிற்கு எதிராக பொருளாதார தடைகளை கொணடுவர அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. தேர்தல் மூலம் தெளிவான ஜனாதிபதி அபியோலாவினை கைது செய்து அங்கு இராணுவ ஆட்சி செய்து வருமாறு குறிப்பிடத்தக்கது.

அபியோலா தற்போது இராணுவ விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவரை விடுவிக்குமாறு மககள் ஆர்ப்பாட்டங்களிலும் வேலை நிறுத்தத்திலும் குதித்துள்ளனர்.

## அ. தி. மு. கவில் காளிமுத்து

(சென்னை)

கே. காளிமுத்து தி. மு. கவிலிருந்து மீண்டும் அ. தி. மு. கவில் சேர்ந்துள்ளார்.

## மகோற்சவம்

நல்லூர் சட்டநாதர் ஆலய வருடாந்த அம்பாள் மகோற்சவம் நாளை ஞாயிறு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 8-ஆம் திகதி ரதோற்சவம் நடைபெறும்.

★ ★

வண்ணை நொச்சியம்பதி பத்திரகாளி அம்மன் கோவில் வருடாந்த அலங்கார உற்சவம் நாளை ஞாயிறு ஆரம்பமாகிறது.

மூன்றாம் திகதி புதன்கிழமை மாலை 4.00 மணியளவில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி சபா. ஜெயராசா வெளியீட்டுரை நிகழ்த்தவுள்ளார். நா. க. சண்முகநாதபிள்ளை, ந. வீரமணிஐயர், கா. சிவத்தம்பி ஆகியோர் மதிப்பீட்டுரை நிகழ்த்தவுள்ளனர்.

## சாக்கு தட்டுப்பாட்டால் விவசாயிகள் துன்பம்

(யாழ்ப்பாணம்)

வன்னிப் பகுதிகளில் சாக்கிற்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டினால் விவசாயிகள் தமது உற்பத்திப் பொருட்களை சேமித்து வைக்க முடியாத நிலைஏற்பட்டுள்ளது.

நெல் உழுந்து, பயறு போன்றஉற்பத்திப் பொருள்களின் அறுவடையின் பின்னர் அவற்றை சாக்கில் நிரப்பி பாதுகாத்து வைத்திருப்பதற்கு சாக்கிற்கு பெரும் பற்றாக்குறைஏற்பட்டுள்ளது.

வவுனியா நகரிலிருந்து சாக்கினை எடுத்து வருவதற்கு சிறிலங்கா இராணுவம் தொடர்ந்து தடை விதித்துள்ளது.

## 3 டெஸ்ட்டுகளில் பாக். ஆடும்

(கொழும்பு)

இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் கிரிக்கட் அணி மூன்று டெஸ்ட் போட்டிகளிலும், செப்டம்பரில் இடம்பெறவுள்ள நான்கு நாடுகள் பங்குபற்றும் உலகத் தொடர் போட்டியிலும் பங்குபற்றும்.

இவ் அணியில் காயமடைந்ததன் காரணமாக ஜாவேத் மியாண்டாட் இடம்பெறவில்லை.

## டாங்கி தகர்ப்பு வெடிமருந்து

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் டாங்கை தகர்த்தெறியக் கூடிய வெடிப்புத்திறன் கொண்ட வெடிப்பொருள்களை வாங்க உக்ரேயினுடன் ஒப்பந்தம் செய்துள்ளது. ஒரு கோடி 40 லட்சம் டொலர் விலையில் இந்த வெடிப்பொருள்களை வழங்குவதற்கான கடன் கட்டளைகள் உக்ரேயினிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994. 07, 30**

**சனி இரவு**

08. 01 அறிவியற் கலசம்
08. 10 - நிகழ்வும் பகிர்வும்
08. 25 - நேயர் கடிதங்கள்
08 30 - செய்திகள்
08. 40 - சித்திரம் "வீரமறவர் ஆட்சி"

**1994. 07. 31**

**ஞாயிறு காலை**

07. 02 - மாவீரவணக்கம்
07. 15 - களத்தில் மலர்ந்தவை
07. 30 - செய்திகள்
07. 35 - பத்திரிகைச் செய்திகள்
07. 40 - களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## மதுவரி காவலர் பதவி 26இல் நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

மதுவரி காவலருக்கான நேர்முகப் பரீட்சை அடுத்த மாதம் 26 ஆம் திகதி என மதுவரி ஆணையாளர் டபிள்யூ. என். எல். சந்திரரெட்ண அறிவித்துள்ளார்.

கொழும்பில் இதற்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெறவுள்ளதால் அன்றைய தினம் தவறாது நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இத்தகவலை தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் யாழ் செயலகத்திற்கு அனுப்பி வைத்துள்ளார்.

(பா)

### கொழும்பில்

வைத்துள்ளது இது தொடர்பாக, ஜெய்ப்பூர் நிறுவன யாழ் கிளை தனது கொழும்பு கிளைக்கு, தனது நிலையை தெளிவு படுத்தியதைத் தொடர்ந்து, கொழும்பு ஜெய்ப்பூர் நிறுவனப் பணிப்பாளர், அமைச்சர் ஒருவரின் மூலம் ஜனாதிபதிக்கு நிலைமையை விளக்கி, களஞ்சிய வாடகையை இரத்துச்செய்யுமாறு வேண்டுகோள் விடுத்தது.

ஜனாதிபதியின் கப்பல்துறை அமைச்சுக்கான விசேட பணிப்புரையில் மேற்படி செலவை இரத்துச் செய்யுமாறும், பொருள்களை வடக்கிற்கு கொண்டு செல்ல ஒழுங்குகள் மேற்கொள்ளுமாறும் உத்தர விடப்பட்டது,

இந் நிலையில் பாராளுமன்றம் கலைக்கப்பட்டு நிலைமைகள் குழப்பமடைந்துள்ளதால் பொருள்கள் எடுத்து வரப்படுதல் சிரமத்திற்குள்ளாகியுள்ளதாகவும் களஞ்சிய வாடகையும் அதிகரிக்கப்படக் கூடும் எனவும் தெரிய வருகிறது-

(பா), (நி)

# தனியாரிடமுள்ள சகல தோட்டங்களும் மக்களுக்கு வழங்கப்படும்

## அப்புத்தளையில் சந்திரிகா

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணி ஆட்சிப் பொறுப்பை ஏற்றதும் தனியாருக்கு வழங்கப்பட்ட சகல தோட்டங்களும் மக்களுக்கு வழங்கப்படும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் கம்பஹா மாவட்ட தலைமை வேட்பாளரும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிப் பிரதித்தலைவியுமாகிய சந்திரிகா குமாரணதுங்கா தெரிவித்தார்.

நேற்று முன்தினம் இரவு அப்புத்தளை தேர்தல் தொகுதியில் நடைபெற்ற பிரசாரக் கூட்டமொன்றில் உரையாற்றும் போது அவர் இவ்வாறு கூறினார்.

இம்முறை நடைபெறும் பொதுத்தேர்தலில் நிச்சயம் பொதுஜன ஐக்கிய முன்னணி வெற்றியீட்டி ஆட்சி அமைக்கும் எனவும் அவர் கூறினார்.

அவர் அக்கூட்டத்திற்கு நள்ளிரவுக்குச் சற்று முன்னர் சென்ற போதும் கடும் குளிரையும் பொருட்படுத்தாது ஆயிரக்கணக்கான மக்கள் அமர்ந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளைபெருந்தொகையான தோட்டத் தொழிலாளர்கள் இக் கூட்டத்திற்கு வருகை தந்தமை குறிப்பிடத்தக்க அம்சமாக அமைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

## 3 ஆம் ஆண்டு நினைவாக



## வீரவேங்கை ராஜீவ்

### (குமாரசாமி ஜெயக்குமார்)

7ஆம் வட்டாரம், புங்குடுதீவு

பிறப்பு: 1974-10-25 வீரச்சாவு: 1991-07-30

பூதவுடல்தான் மறைந்தாலும் — உன்
புகழுடல் என்றும் மறைவதில்லை
ஆண்டுகள் மூன்றும் கழிந்தாலும் — ராஜீவ்
உன் அன்புமுகம் இதயத்தில் நிலைத்திருக்கும்.

ஐந்து சந்தி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்

(8975)

### வடக்கு-கிழக்கில்

ணத்தில் மூவரும், கிளிநொச்சியில் ஒருவரும், முல்லைத்தீவில் ஒருவரும், கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பில் தலா ஒருவருமாக இவர்கள் சேவையாற்றவுள்ளனர்.

இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் இவர்கள் சேவையாற்றவுள்ளதாகவும், நிலைமைகளைப் பொறுத்து இவர்களின் சேவை நீடிப்பதற்கு யோசனை செய்யப்படுமெனவும் யாழ் வந்துள்ள இவ்விரு ஐ நா. அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்.

பொது வைத்திய நிபுணர்களுக்கு தேவையிருப்பதாக கூறிய இவர்கள், சத்திர சிகிச்சை நிபுணர்கள், இங்கு முக்கியமாகத் தேவைப்படவில்லை எனக் கூறினர். வரவிருக்கும் வைத்திய நிபுணர்கள், பருத்தித்துறை, பளை, கோப்பாய் வைத்தியசாலைகளிலேயே கடமையாற்றுவர் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது,

பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்தோரே கடமையாற்ற அழைக்கப்படலாம் எனத் தெரிவித்த ஐ. நா. அதிகாரிகள், வேறுவகையான மருத்துவ உதவிகளைப் பற்றி தீர்மானிக்கவில்லை எனவும் கூறினர்.

இவர்கள் இங்குள்ள வைத்திய நிலைமைகள் குறித்து, கலந்துரையாடல்களை, இன்றும் நாளையும் நடத்தவுள்ளனர். திங்கட்கிழமையளவில் இவர்கள் கொழும்பு திரும்பவுள்ளனர்.

### யாழ்.

யே தரித்து நிற்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது, அரசின் இத்தகைய நடவடிக்கைகளால் வடபகுதிக்கான உணவுப் பொருட்கள் வருவதில் தாமதம் ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது-

இதேவேளை யாழ். மாவட்டத்தில் உணவுப் பொருள்களுக்கான நெருக்கடி ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடன் யாழ். அரசாங்க அதிபர் அத்தியாவசிய உணவுப் பொருள்களை பெருமளவில் யாழ்ப்பாணத்திற்கு தருவிக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்.

அடுத்த மாதம் நடுப்பகுதியில் இடம்பெறும் தேர்தல் நெருக்கடியில் யாழ். மாவட்டத்திற்கான உணவுப் பொருள்கள் தருவிப்பதில் சிரமங்கள் ஏற்படுவதை தவிர்க்கும் நோக்குடன் அரசாங்க அதிபரால் இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்சமயம் கொழும்பில் உள்ள யாழ். அரச அதிபர் பெருமளவில் சீனி, மா ஆகிய பொருள்களை யாழ்ப்பாணத்திற்கு கப்பலில் அனுப்பி வைப்பதற்கு எடுத்த நடவடிக்கை பயனளித்துள்ளது.

மாகோ கப்பலில் இரண்டாயிரம் மெற்றிக்தொன் சீனியும் ஆயிரம் மெற்றிக் தொன் மாவும் அனுப்பிவைக்கப்படும் என தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. (தி)

### எந்தக் கட்சி

கேட்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் எவ்வேளையிலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலையில் தமிழர்கள் தூக்கமின்றி விழித்திருப்பதாகவும் பகலிலேயே தூங்குவதாகவும் கூறப்படுகிறது.

அத்துடன் இவர்கள் பகல் வேளைகளில் கூட வெளியே செல்ல அஞ்சுகின்றனர். வீதி நிலையப் பகுதி ஆகியன குறித்தும் வினவுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இதனால் தாம் எவ்வேளையிலும் கைதாகலாம் என்பதனாலேயே இவர்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதை தவிர்த்து வருவதாகவும் அறிய வருகிறது.

மேலும் கொழும்பு நகரப் பகுதியில் தங்கியிருந்தோர்

## இராசவீதி பஸ்சேவை

பொது மக்களின் வேண்டுகோளுக்கு இணங்கவும் மக்களின் நலன் கருதியும் யாழ்-அச்சுவேலி போக்குவரத்துச் சேவை இராச வீதி ஊடாக 986-ம் இலக்கப் பாதையில் நாளை மறுதினம் முதலாம் திகதி முதல் நடத்தப்படவுள்ளது.

அச்சுவேலியிலிருந்து காலை ஏழு மணிக்கு ஆரம்பமாகும் இச் சேவை பிற்பகல் நான்கு மணிக்கு இடையில் நான்கு தரம் நடத்தப்படவுள்ளது என்று சிற்றூர்தி சேவை சங்கங்களின் இணையம் அறிவித்துள்ளது.

### ஐ. தே. க

களையிட்டு அவதானமாக இருக்கும் படியும் முன்னணியின் வளர்ச்சியைத் தடுக்க ஐ.தே க. செய்யும் சதி வேலைகளுக்கு இடம் கொடுக்க வேண்டாம் எனவும் இவ் அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### பல்கலைக்கழக

எதிர்வரும் தேர்தலிற்கு முன்னர் இங்கு எடுத்துவரப்பட்டாலே நன்மை உண்டு. இல்லையேல் தேர்தலிற்குப் பின்னர் என்ன நிலைமையோ தெரியாது என தெரிவித்தார். (பா)

### மூதவையும்

கும் மகஜர் ஒன்றும் துணைவேந்தரிடம் கையளிக்கப்பட்டது.

இது தொடர்பாக துணைவேந்தரை நமது நிருபர் சந்தித்தபோதே துணைவேந்தர் மேற்கண்டவாறு தெரிவித்தார்-

அவர் மேலும் கூறுகையில் பல்கலைக் கழகத்துடன் சம்பந்தப்பட்ட அறிஞர்களின் விருப்பத்தின் படியே இம் முடிவு எடுக்கப்பட்டது- ஆனால் இம் முடிவினால்,

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 10 - 03 - 1935

உதிர்வு: 10 - 08 - 1993

அமரர்

### திரு. தர்மலிங்கம் கணேசலிங்கம்

திதி: 30 . 07 . 94

நீங்காத நினைவு பேர் அலையுட் -
தினம் மூழ்கிட எமையே வைத்ததும் ஏனோ!
தாங்காத துயர் தந்தும் மறைந்தாய் -
தலைவனே! எமைவிட்டு பிரிந்ததும் ஏனோ!

இன்றைய தினம் நடைபெறும் அன்னாரின் ஆன்ம ஈடேற்று வைபவங்களில் பங்கு பற்றியும் மதிய போசன நிகழ்வினில் கலந்து கொண்டும் சிறப்பிக்குமாறும் அனைவரையும் பணிவன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

அம்மன் கோவிலடி,
வல்லை.

அன்புடன் நினைவு கூரும்
மனைவி, பிள்ளைகள்,
மருமகன்.

(8956)

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



| | | |
|---|---|---|
| தோற்றம்:- சி. மகேஸ்வரமூர்த்தி | - | 18.11.1954 |
| ம. மனோராணி | - | 24.11.1956 |
| ம. துஷீபா | - | 31.10.1986 |
| ம துவேதா ] | - | 27.05.1991 |
| ம. துளசி ] | - | 27.05.1991 |

**மறைவு** **10-8-1993** **திதி** **30-7-1994**

கடந்த 10.8 1993 அன்று எமையெல்லாம் பிரிந்து கிளாலிக் கடற்பரப்பில் சங்கமமான எமது அன்புத் தெய்வங்கள் திரு. சி. மகேஸ்வரமூர்த்தி, திருமதி ம. மனோராணி, அவர்தம் அன்புச்செல்வங்கள் துஷீபா, துவேதா, துளசி, நீங்கள் எமைப்பிரிந்து ஆண்டொன்று ஆனாலும் எம்மனதில் உங்கள் நினைவோ அலையலையாக எழுந்து மோதிக்கொண்டே இருக்கின்றது.

மரணம் நிச்சயமாயினும் உங்கள் மரணம் எல்லோர் சிந்தையையும் வாட்டிவதைப்பதாக அமைந்துவிட்டதே. எங்கள் அன்புச் செல்வங்களே, உங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதே எங்கள் கடனாக்கி நிற்கும் உங்கள்

தாய், தந்தை, உடன்பிறப்புக்களும், குடும்பத்தினரும், உறவினர்களும்

(8977)

இப் பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

அத்துடன் இவர்கள் பகல் வேளைகளில் கூட வெளியே செல்ல அஞ்சுகின்றனர். வீதிகள் தோறும் இராணுவத்தினரும், பொலிசாரும் பெருமளவில் காவல் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதே இதற்குக் காரணம் எனத் தெரிய வந்துள்ளது. இவர்கள் வீதியால் செல்வோரை தீவிர சோதனைக்குட்படுத்துவதாகவும் கைப்பைகள் உட்பட இவ்வாறு சோதனையிடப்படுவதுடன் அடையாள அட்டைகள், தங்குமிடங்கள் குறித்த விபரங்கள், பொலிஸ் அறிய வருகிறது.

மேலும் கொழும்பு நகரப் பகுதியில் தங்கியிருந்தோர் அச்சம் காரணமாக வெளியிடங்களுக்கு இடம்பெயர்ந்து கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

இதேவேளை அங்கிருந்து வந்த பெண்மணி ஒருவர் இதுகுறித்து தெரிவிக்கையில் எக்கட்சி ஆட்சிக்கு வந்தாலும் கொழும்பில் பெரும் கலவரம் வெடிக்கும் என்ற அச்சமே அங்குள்ள தமிழர் மத்தியில் காணப்படுவதை உணர முடிகிறது என்றார்.

## அறிவித்தல்

31-07-94 ஞாயிற்றுக்கிழமை அன்று சண்டிலிப்பாய் ஞான வைரவர் கோவில் பூங்காவனத் திருவிழாவிற்கு நடைபெறவிருந்த யாழ். ரமணனின் ராஜன் இன்னிசைக் கச்சேரி இன்று 30-07-94 சனிக்கிழமை அ. கமலநாதன் அவர்களின் மகாபாரதம் என்னும் சொற்பொழிவை தொடர்ந்து இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம்,

(8978) பூங்காவன பொறுப்பாளர்கள்.

## பிற்போடப்பட்டுள்ளது

நிசாந்தன் விளையாட்டுக் கழகத்தின் ஆதரவில் நிசாந்தன் கலைக் குழு வளர்ச்சி நிதிக்காக 30-07-94 (இன்று) உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் நடைபெறவிருந்த மாபெரும் நாடக விழா தவிர்க்க முடியாத காரணத்தினால் 06-08-94-ம் திகதியாக பிற்போடப்பட்டுள்ளது என்பதனை ரசிகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

(சி-10007) - நிசாந்தன் கலைக்குழு

## பிற்போடப்பட்டுள்ளது

யாழ்/ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை பழைய மாணவர் சங்க நிதிக்காக 29-7-94 அன்று அதிர்ஷ்டம் பார்க்கவிருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 29-8-94 அன்று பிற்போடப்பட்டுள்ளது.

- நிர்வாகம்

(8973)

விருப்பத்தின் படியே இம் முடிவு எடுக்கப்பட்டது- ஆனால் இம் முடிவினால், மருத்துவபீட மாணவர்மட்டத்தின் தரம் குறைந்துவிடும் என்பதனால் இம் முடிவை பகிஷ்கரிக்கின்றனர் என்றும் இது தொடர்பாக தனிப்பட்ட முடிவை நான் கூற முடியாது- பல்கலைக் கழக மூதவையும் பேரவையும் முறையே 23, 27ம் திகதிகளில் கூடவுள்ளன- இதன்போதே இது சம்பந்தமான விடயங்கள் ஆராயப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

### வீரச்சாவு

வீரச்சாவடைந்த கப்டன் சிந்து (சிறப்டின் மொறைஸ் அலோசியஸ் மொறைஸ் - செல்வபுரம் முல்லைத்தீவு- தற்போதையமுகவரி முள்ளியவளை முல்லைத்தீவு) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### எதிரணியினர்

லின் பேரிலேயே இச் சம்பவம் நடைபெற்றதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

### வெளிநாட்டு

டர்களை கணிசமான அளவில் தேர்தல் கண்காணிப்பிற்கு பயன்படுத்தப்பட இருப்பதாகவும் தெரியவருகின்றது-

### அரச

இவ்வாறான சம்பவங்கள் தொடர்பாக பொலிசார் கூட பக்கசார்பாக நடந்து கொள்வதாகவும் தேர்தல் நடைபெறும் இருபத்திரண்டு தேர்தல் மாவட்டங்களில் பத்து மாவட்டங்களுக்கு தமது அங்கத்தவர்களை அனுப்பி வைத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமது அமைப்பின் சார்பில் தேர்தல் கடமைகளில் ஈடுபடுபவர்களுக்கான பயிற்சியை ''வாஷிங்டனின் மனித உரிமை தொடர்பான நீதி விசாணைக்குழு'' வழங்கமுன் வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

# மரண அறிவித்தல்கள்

## சோமு குமரேசு (காந்தியப்பு)

புங்குடுதீவு மேற்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது கோண்டாவில்றோட், இருபாலை கோப்பாயில் (இராமநாதன் கலட்டி) வசித்தவருமாகிய சோமு குமரேசு (காந்தியப்பு) அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற சிவக்கொழுந்துவின் அன்புக்கணவரும், காசிப்பிள்ளை, தம்பையா, இராமலிங்கம், காலஞ்சென்ற சின்னாச்சி, கற்பகம், பார்வதி, நாகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், நடராசா, சதாசிவம் காலஞ்சென்ற தெய்வானை, செல்லாச்சி (காரைநகர்) ஆகியோரின் அருமை மைத்துனரும், கணபதிப்பிள்ளை வசந்தனின் அன்பு மாமனாரும், தேவமணியின் அன்புத் தந்தையும் பிரகலாதன் (கல்வித் திணைக்களம்), பிரதீபன் (பு. ம. ம. வித்தியாலய மாணவர்), அனுஷா (யா. இ. மகளிர் கல்லூரி மாணவி), சுகந்தினி (பு. ஸ்ரீ. சு. ம. வித்தியாலய மாணவி) ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் 30-07-94(இன்று)சனிக்கிழமைகாலை 10 மணிக்கு தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்

தகவல்:
கணபதிப்பிள்ளை வசந்தன்
(மருமகன்)

(8970)

## திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி

இருபாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கோவில் வீதி, 124 இல் வசித்தவருமாகிய திருமதி சின்னத்தம்பி சரஸ்வதி 29-07-1994 வெள்ளிக்கிழமை காலமானார். அன்னார் கணபதிப்பிள்ளை சின்னத்தம்பியின் அன்பு மனைவியும். இந்திராதேவி, லோகேஸ்வரன், செல்வராணி ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமேஸ்வரன், சாந்தினி, கோபிநாத் ஆகியோரின் அன்பு மாமியாரும், கிரிதரன், பகீரதன், விக்னபாலன், விசாயினி, விபூசினி, யுகன், தசன், தாரிணி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் (இன்று) சனிக்கிழமை 30-07-1994 காலை நடைபெற்று 10.00 மணிக்கு பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகச் செம்மணி மயானத்திற்குஎடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

தகவல்:
லோகேஸ்வரன்
[மகன்]

124, கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (8974)